# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 21 செவ்வாய்க்கிழமை 06.08.2024 கதிர் 323




# பொலிஸ், காணி அதிகாரம் வழங்கவா மாகாண சபை தேர்தல் திருத்த சட்டம்?



மாகாண சபைகளுக்கு பொலிஸ், காணி தொடர்பிலான கட்டளைகளை நிறைவேற்றிக்கொள்ளும் நோக்கிலேயே மாகாண சபைத்

## நாடாளுமன்றத்தில் விமல் வீரவன்ச கேள்வி

தேர்தல் தொடர்பிலான திருத்தச்சட்டம் அவசர அவசரமாக கொண்டுவரப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவங்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று செவ்வாய்க்கிழமை உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட விமல்வீரவங்ச, காலஎல்லைகள் எதுவுமின்றி மாகாண சபைத் தேர்தலை நல்லாட்சி அரசாங்கம்தான் பிற்போட்டது. தேர்தல் பிற்போடப்பட்டு பல வருடங்களாகிவிட்டன. ஜனாதிபதித் தேர்தலொன்று நடைபெற உள்ள இத்தருணத்தில் மாகாண சபை தேர்தல் தொடர்பான திருத்தச்சட்டமொன்று அவசரமாக கொண்டுவருவதன் நோக்கம் என்ன?

மாகாண முதலமைச்சருக்கு சார்பான வகையில் ஆளுநர் ஒருவரை நியமித்துக்கொள்ளும் அதிகாரம் வழங்கப்படுவதன் ஊடாக பொலிஸ் கட்டளைகள், காணி கட்டளைகள், சூழல் கட்டளைகள் மற்றும் ஏனைய கட்டளைகளை மாகாண சபைகளுக்கு ஏற்ற வகையில் நிறைவேற்றிக்கொள்ள முடியும்.

இதன் ஊடாக 13ஆவது திருத்தச்சட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தன எதிர்பார்த்த பாதுகாப்புகள் அனைத்தும் நீங்கிச்செல்லும். தமிழ்த் தேசியக் 2 ➤

# தவறிழைத்தவர்கள் அடையாளம் மாகாண அமைச்சுக்கு அறிக்கை

மன்னார் வைத்தியசாலையில் இளம் தாயொருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் வட மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரினால் அமைக்கப்பட்ட விசாரணை குழுவின் விசாரணைகள் நிறைவடைந்துள்ள நிலையில், சிலர் தவறிழைத்துள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் அஸாத் எம்.ஹனீபா தெரிவித்துள்ளார்.

அந்த இளம் தாயின் மரணத்துக்கு சம்பவ தினத்தன்று விடுதியில் இருந்தவர்களின் அசமந்தப் போக்கே காரணம் என குற்றம் சுமத்தப்பட்டது. இந்த மரணம் தொடர்பாக வட மாகாண சுகாதார அமைச்சினால் சுயாதீன விசாரணைக் குழு நியமிக்கப்பட்டு மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு வருகை தந்து துரித விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

விசாரணைகள் தற்போது நிறைவடைந்த நிலையில், விசாரணைகளின் அடிப்படையில் சிலர் தவறிழைத்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பாக விசேட அறிக்கை வட மாகாண சுகாதார அமைச்சின் செயலாளருக்கு மேலதிக நடவடிக்கைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# தமிழக மீனவர்கள் 22 பேர் கற்பிட்டி பகுதியில் கைது

## நேற்றிரவு கடற்படைஅதிரடி நடவடிக்கை



தமிழகத்தின் தூத்துக்குடி மாவட்டத்தில் இருந்து ஆழ்கடலில் தங்கி மீன்பிடிக்க சென்ற 2 விசைப் படகுகள் மற்றும் அதிலிருந்த 22 மீனவர்களை இலங்கை கடற்படையினர் சிறைபிடித்துள்ளனர். இச்சம்பவம் நேற்றிரவு கற்பிட்டிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இந்த 2 விசைப்படகுகளும் திங்கள்கிழமை 2 ➤

# தமிழ் முற்போக்கு கூட்டணி சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு

## மனோ கணேசன் அறிவிப்பு

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவிற்கு ஆதரவு வழங்க மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்கு கூட்டணி தீர்மானித்துள்ளது.

கொழும்பில் இன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே இந்த அறிவிப்பை மனோ கணேசன் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

'ஐக்கிய மக்கள் சக்தியுடன் எமது கட்சி புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடும். நாங்கள் சூரியனையும் சந்திரனையும் கேட்கவில்லை. பெருந்தோட்ட சமூகம் மற்றும் பிற இடங்களில் வாழும் தமிழர்கள் அனைவரும் இலங்கையர்களாக கருதப்பட வேண்டும் என்றுதான் நாங்கள் விரும்புகிறோம்' என மனோ கணேசன் இதன்போது மேலும் கூறினார்.

# மின்சாரம், எரிபொருள் விநியோகம் அத்தியவசிய சேவையாக பிரகடனம்

மின்சாரம் மற்றும் எரிபொருள் விநியோகம் ஆகியவற்றை அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தி அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் யோசனைக்கு அமைவாக ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்கவின் கையொப்பத்துடன் இந்த வர்த்தமானி வெளயாகியுள்ளது.

மின் விநியோகம், பெற்றோலிய உற்பத்தி, எரிபொருள் விநியோகம் ஆகியன அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. 2 ➤

# மீனவர் பிரச்சினையைத் தீர்க்க பேச்சுக்கு ஏற்பாடு செய்யுங்கள்

## ஜெய்சங்கரிடம் அண்ணாமலை கோரிக்கை

இந்தியா, இலங்கை பிரதிநிதிகள் சந்திப்பை ஏற்படுத்தி மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண வேண்டும் என மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.டிஜய்சங்கரிடம் அண்ணாமலை தலைமையிலான மீனவர்கள் கோரிக்கை மனு வழங்கினர்.

பாஜக மாநில தலைவர் அண்ணாமலை தலைமையில் தமிழக மீனவர் பிரதிநிதிகள் நேற்று புதுடில்லி சென்றனர். வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கரை சந்தித்து தமிழக மீனவர் பிரச்சினை தொடர்பான மனுவை வழங்கினர்.

சர்வதேச ஆழ்கடல் பகுதியில் இலங்கை கடற்படை படகு மோதி உயிரிழந்த மீனவர் மற்றும் காணாமல் போன மற்றொரு மீனவர் குறித்தும், இராமநாதபுரத்தில் மீனவர்கள் போராட்டம் குறித்தும் பேசப்பட்டது. காணாமல் போன மீனவரை விரைந்து கண்டுப்பிடிக்க நடவடிக்கை எடுக்கவும், இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நிகழக்கூடாது என்றும் அப்போது மீனவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

தொடர்ந்து, மத்திய அமைச்சர் ஜெய்சங்கர் மீனவ பிரதிநிதிகளிடம் பேசியதாவது: கடந்த 10 ஆண்டு கால ஆட்சியில் இலங்கைக் கடற்படையின் துப்பாக்கிச்சூடு சம்பவங்கள் முற்றிலுமாக தடுக்கப்பட்டுள்ளன. மேலும் 273 தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் 204 மீனவர்கள் விடுவிக்கப்பட்டு பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர்.

இலங்கை காவலில் மீதமுள்ள 69 மீனவர்களில், 61 பேர் நீதிமன்ற காவலிலும் 8 பேர் தண்டனை கைதிகளாகவும் இருக்கிறார்கள். 3 விசைப்படகு உரிமையாளர்களுக்கு அபராதம் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. இவை அனைத்துக்கும் சுமூகமாக தீர்வுகள் காணப்பட்டு அனைவரும் தமிழகத்துக்கு பாதுகாப்பாக அழைத்து வரப்படுவார்கள்.

# சஜித் பிரேமதாசவை இலக்கு வைத்துச் செயற்படுங்கள்

## கட்சி உறுப்பினர்களுக்கு நாமல் அறிவுரை



தேர்தல் பிரச்சாரத்தின் போது முக்கிய எதிராளியாக சஜித் பிரேமதாசவையே பொது ஜன பெரமுன இலக்கு வைக்கவேண்டும் என நாமல் ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவட்ட தலைவர்களுடனான சந்திப்பின்போது அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார். ஜனாதிபதி தேர்தலில் கட்சி வெற்றிபெறும் நோக்கத்துடன் செயற்படுமாறு வேண்டுகோள் விடுத்துள்ள அவர், முக்கிய எதிராளியாக எதிர்கட்சி தலைவரை இலக்கு வைக்கவேண்டும் என தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்திக்கு எதிரான ஐக்கியப்பட்ட அணுகுமுறையை பின்பற்றவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள நாமல்ராஜபக்ச கட்சி உள்விவகாரங்கள் குறித்து கவனம் செலுத்துவதை விட ஐக்கிய மக்கள் சக்திக்கு எதிரான பிரச்சாரத்தில் கவனம் செலுத்தவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# வவுனியாவில் ஆசிரியர் சடலமாக மீட்பு

வவுனியா - நெளுக்குளம் பாலாமைக்கல் பகுதியில் ஆசிரியர் ஒருவர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த வீதியூடாகப் பயணித்த பிரதேசவாசிகள் சிலர் நெளுக்குளம் காவல்துறையினருக்கு வழங்கிய தகவலுக்கு அமைய இன்று காலை இந்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் கடமையாற்றிய தகவல் தொழில்நுட்ப ஆசிரியர் ஒருவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகக் காவல்துறையினரின் முதற்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

சடலம் மீட்கப்பட்ட கிணற்றுக்கு அருகில் குறித்த ஆசிரியரின் துவிச்சக்கர வண்டி, பாதணிகள் மற்றும் குடை என்பனவும் காவல்துறையினரால் மீட்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நெளுக்குளம் காவல்துறையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# அநுரகுமார சார்பில் கட்டுப்பணம் செலுத்தப்பட்டது

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளராக அநுர குமார திசாநாயக்க சார்பில் கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது.

இராஜகிரியவிலுள்ள தேர்தல் அலுவலகத்தில் இன்று கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர்களான விஜித ஹேரத், கலாநிதி ஹரினி அமரசூரிய மற்றும் சட்டத்தரணி சுனில் வட்டகல உள்ளிட்டோரும் பிரசன்னமாகியிருந்தனர்.

அதற்கமைய இம்முறை ஜனாதிபதி தேர்தலுக்காக இதுவரை 18 பேர் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

# சிரேஷ்ட பிரஜைகளுக்கு வட்டி வீதம் அதிகரிப்பு



60 வயதுக்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகளுக்கு நிலையான வைப்புகள் மீதான வருடாந்த வட்டி விகிதத்தை அதிகரிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அதன்படி அதிகபட்சமாக 1 மில்லியன் ரூபாய் வைப்புத்தொகைக்கு முதல் 2 வருட காலப்பகுதிக்கு 10 சதவீதம் வரை வட்டிவீதத்தை வழங்க அனுமதி கிடைத்துள்ளது.

### தமிழக மீனவர்கள்...

பிற்பகல் சர்வதேச கடற்பகுதி பகுதியில் சென்றபோது சீரற்ற வானிலை, கடல் நீரோட்டங்கள் காரணமாக இலங்கை கடற்பகுதியில் சென்றதாக தமிழக மீனவர்கள் தெரிவிக்கின்றார்கள்.

அப்போதுஅங்குரோந்துவந்தஇலங்கைகடற்படையினா 2 விசைப் படகுகளுடன் 22 மீனவர்களையும் கைது செய்தனா.

இதேவேளையில், இவாகள் நேற்று திங்கட்கிழமை இரவு கற்பிட்டி வடக்கு கடல் பகுதியில் வைத்து எல்லை தாண்டி மீன்பிடித்ததாக அப்பகுதியில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த கடற்படையினரால் கைது செய்து கற்பிட்டி விஜய கடற்படை முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டதாக இலங்கை கடற்படையினா தெரிவித்தனா.

கைதுசெய்யப்பட்ட மீனவா்களிடம் முதற்கட்ட விசாரணை செய்த பின்னா் இன்று நண்பகல் புத்தளம் கடற்தொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் கடற்படையினா் தெரிவித்தன்ா.

### பொலிஸ், காணி அதிகாரம் .....

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவை பெற்றுக்கொள்ளும் நோக்கிலேயே ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்ன இந்த சட்டத்திருத்தத்தை கொண்டுவர முற்படுகின்றனா' என விமல் வீரவன்ச குற்றஞ்சாட்டினாா.

விமல்வீரவங்சவின் இந்த குற்றச்சாட்டுக்கு ஆளுங்கட்சி சார்பில் பதிலளித்த அமைச்சா் சுசில் பிரேம்ஜயந்த, ‘இந்தச் சட்டம் உடனடியாக கொண்டுவரப்படவில்லை. நிகழ்ச்சி நிரலில் உள்வாங்கப்பட்டு ஆறு மாதங்களின் பின்னரே இது கொண்டுவரப்படுகிறது. அவ்வாறு கொண்டுவரப்பட்டாலும் சட்டம் திருத்தத்திற்கு உள்ளாக ஆறுமாதங்கள்வரை செல்லும் அதன் போது திருத்தங்கள் இருந்தால் மேற்கொள்ள முடியும். உயர்நீதிமன்றத்தில் சவாலுக்கும் உட்படுத்த முடியும்– என்றாா.

### மின்சாரம், எரிபொருள்...

இந்த வா்த்தமானிக்கு அமைவாக எந்தவொரு அரச கூட்டுத்தாபனம், அரச திணைக்களம், உள்ளூராட்சி மன்றம், கூட்டுறவுச் சங்கம் அல்லது அவற்றின் கிளை மூலம் வழங்கப்படும் சேவைகள் சாதாரண மக்களின் அன்றாட வாழ்விற்கான அத்தியாவசிய சேவைகள் என அறிவிக்கப்பட்டுள்ளது.




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# பங்களாதேஷ் கலவர பின்னணியில் பாகிஸ்தானின் ஐஎஸ்ஐ அமைப்பு?

வங்கதேச கலவரத்தின் பின்னணியில் பாகிஸ்தானின் ஐஎஸ்ஐ உளவு அமைப்பு இருப்பதாக குற்றம் சாட்டப்பட்டு உள்ளது.

இதுகுறித்து பங்களாதேஷின் முன்னணி வார இதழான ஹபிளிட்ஸ்' ஆசிரியர் சலா உதின் சோகிப் சவுத்ரி எழுதிய தலையங்க கட்டுரையில் இது தொடர்பாகக் கூறியிருக்கின்றார்.

"மாணவர்கள் போராட்டத்தை 157 பேர் ஒருங்கிணைந்து நடத்தினர். இந்தப் போராட்டத்தில் அல்-ஹய்தா தீவிரவாத அமைப்புடன் தொடர்புடைய பிஎன்பி கட்சிக்கு முக்கிய தொடர்பு உள்ளது. பிஎன்பி கட்சியின் மூத்த தலைவர் டேவிட் பெர்க்மான் போராட்டத்தை தூண்டினார். பிரிட்டனுக்கு தப்பியோடிய பிஎன்பி கட்சியின் தலைவர் தாரிக் ரகுமான், அங்கிருந்து கொண்டு போராட்டத்தை வழிநடத்தினார். இவர் பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் கலீதா ஜியாவின் மகன் ஆவார்.



மாணவர் போராட்டத்தின் பின்னணியில் பாகிஸ்தானின் ஐஎஸ்ஐ உளவு அமைப்பு, அமெரிக்காவின் சிஐஏ உளவு அமைப்பும் இருக்கிறது. மாணவர்களின் பெயர்களில் ஏராளமான தீவிரவாதிகளும் களமிறங்கி, போராட்ட களத்தை போர்க்களமாக மாற்றினர்.

வங்கதேசம் தற்போது செழுமையாக இருக்கிறது. இதை பாகிஸ்தான் போன்று பங்குரோந்தான நாடாக மாற்ற பழமைவாத முஸ்லிம்களும், தீவிரவாதிகளும் சதி செய்து வருகின்றனர்."

இவ்வாறு தலையங்க கட்டுரையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. பங்களாதேஷ் கலவரத்தை தூண்டுவது தொடர்பாக லண்டனில் ஐஎஸ்ஐ உளவு அதிகாரிகள் சில மாதங்களுக்கு முன்பு ரகசிய கூட்டத்தை நடத்தினர். இதில் பங்களாதேஷை சேர்ந்த பல்வேறு தீவிரவாத குழுக்களின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

அப்போது கலவரத்தில் பலரை கொலை செய்தால் பல கோடி ஷரூபாய் பரிசாக வழங்கப்படும் என்று ஐஎஸ்ஐ சார்பில் உறுதி அளிக்கப்பட்டது. இதன்காரணமாகவே போராட்டத்தில் கணிசமான உயிரிழப்பு ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

ஷேக் ஹசீனா அண்மையில் கூறும்போது, "பங்களாதேஷ், மியான்மரின் சிலபகுதிகளை ஒன்றிணைத்து புதிய கிறிஸ்தவ நாட்டை அமைக்க அமெரிக்கா விரும்புகிறது. வங்கக் கடலில் புதிய கடற்படைத் தளம் அமைக்கவும் அந்த நாடுமுயற்சி செய்கிறது. இதற்கு நான் சம்மதிக்கவில்லை. இதன் காரணமாகவே எனக்கு எதிராக சதி நடக்கிறது" என்று குற்றம் சாட்டினார்.

# "ஷேக் ஹசீனா அரசியலுக்கு இனிமேல் திரும்ப மாட்டார்"



பங்களாதேஷின் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா இனி அரசியலுக்கு திரும்ப மாட்டார் என்று அவரது மகனும் தலைமை ஆலோசகருமான சஜீப் வஜீத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து தனியார் ஊடகத்திடம் தெரிவித்த அவர், "இவ்வளவு கடின உழைப்புக்குப் பிறகு சிறுபான்மையினர் தனக்கு எதிராக திரும்பியதால் ஷேக் ஹசீனா மிகவும் அதிருப்தியடைந்து விட்டார். ஷேக் ஹசீனா பிரதமர் பதவியில் இருந்து விலகுவது குறித்து ஞாயிற்றுக்கிழமை முதல் ஆலோசித்து வந்தார். இனி அவர் அரசியலுக்கு திரும்பி வரமாட்டார்.

அவர் இந்த நாட்டையே தலைகீழாக மாற்றினார். அவர் ஆட்சிக்கு வரும்போது இது ஒரு வீழ்ச்சியடைந்த நாடாக இருந்தது. ஏழை நாடாக கருதப்பட்டது. ஆனால் இப்போது இந்த நாடு ஆசியாவின் அதிகம் வளரும் நாடுகளில் ஒன்றாக இருக்கிறது.

நேற்று மட்டும் கலவரத்தில் 13 பொலிஸார் உயிரிழந்துள்ளனர். கலவரக்காரர்கள் மக்களை கொல்லும்போது பொலிஸார் என்ன செய்யவேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்?" என்றும் சஜீப் வஜீத் கேள்சி எழுப்பியிருந்தார்.

பங்களாதேஷின் பிரதமராக இருந்த ஷேக் ஹசீனா, மாணவர்களின் போராட்டம் தீவிரமடைந்ததை அடுத்து நேற்று பகல் தனது பதவியை ராஜினாமா செய்தார். இதையடுத்து, நண்பகல் 2.30 மணிக்கு அந்நாட்டு இராணுவ விமானத்தில் தனது சகோதரி ஷேக் ரேஹானாவுடன் பிரதமர் மாளிகையான கனபாபனில் இருந்து புறப்பட்டார்.

அவர்கள் புறப்பட்ட விமானம் புதுடெல்லி அருகே ஹிண்டன் விமானப்படை தளத்தில் தரையிறங்கியது. அவர்கள் இங்கிலாந்து செல்ல உள்ளதாகவும், இங்கிலாந்து அரசிடம் ஷேக் ஹசீனா தஞ்சம் கோரியுள்ளதாகவும் தகவல் வெளியாகி உள்ளது. ஷேக் ரேஹானா இங்கிலாந்து குடியுரிமை பெற்றவர் என்றும் எனவே, அவரோடு ஷேக் ஹசீனா லண்டலின் தங்க முடிவு செய்துள்ளதாகவும் கூறப்படுகிறது.




# தேசிய ஊழல் ஒழிப்பு திட்டத்தை தயாரிப்பதற்கான கலந்துரையாடல்



இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துக்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு 2025-2029ம் ஆண்டுக்கான தேசிய ஊழல் ஒழிப்பு திட்டத்தை தயாரிப்பதற்கான பல்வேறு தரப்பினரின் கருத்துக்களை உள்வாங்கும் வடமாகாணத்திற்கான கலந்துரையாடல் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் கிளிநொச்சியிலுள்ள தனியார் விருந்தகத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் மாவட்ட அரசாங்கதிபர் எஸ்-முரளீதரன் கலந்து கொண்டார். மதகுருமார்கள், திணைக்கள தலைவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள்,சுகாதார துறைசார்ந்தவர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள் ஊடகவியலாளர்கள் என பலர் இதில் கலந்துகொண்டனர்.

# மகிந்த – ரணில் சந்திப்பில் என்னதான் பேசப்பட்டது?



"எனக்கு ஆதரவு தர முடியாது என்றால் உங்கள் கட்சி சார்பாக யாரைத்தான் போட்டியிட வைக்க போகின்றீர்கள்?" என்று பொது ஜன பெரமுனவின் தலைவர் மகிந்த ராஜபக்ஷவிடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதில்லை என்றும், தனியான வேட்பாளர் ஒருவரை மொட்டு கட்சியின் சார்பில் களமிறக்குவதற்கும் பொது ஜன பெரமுனவின் உயர் பீடம் கடந்த வாரம் தீர்மானித்தது. இதனையடுத்து பொதுஜன பெரமுனவின் தலைமைக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் முறுகல் நிலை உருவாகியுள்ளது.

மொட்டுவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் ரணிலுக்கான ஆதரவை பகிரங்கமாகவே தெரிவித்துவருகின்றார்கள். மொட்டுத் தலைமை இதனால் சீற்றமடைந்திருக்கின்றது.

இந்தப்பின்னணியில்தான் கடந்த வியாழன் இரவு கொழும்பு 7 இல் உள்ள பிரபல வர்த்தகர் ஒருவரின் வீட்டில் அந்த முக்கிய சந்திப்பு இடம்பெற்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் முன்னாள் ஜனாதிபதியும் பொதுஜன பெரமுனவின் தலைவருமான மகிந்த ராஜபக்ஷ ஆகியோருக்கு இடையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பு தீர்க்கமான ஒன்றாக அமைந்தது.

மகிந்தவும் ரணிலும் வெவ்வேறான அரசியல் முகாம்களில் இருந்தாலும், இருவரும் தனிப்பட்ட முறையயில் நெருக்கமான நண்பர்கள். அரசியலில் இரு தரப்புக்கும் இடையில் முறுகல் நிலை உருவாகியிருக்கும் பின்னணியில் கடந்த வாரம் இடம்பெற்ற இந்த சந்திப்பு அரசியலில் முக்கியமாகப் பேசப்படுகின்றது.

கடந்த வியாழன் இரவு சுமார் 7.30 மணியளவில் கலந்துரையாடல் ஆரம்பமாகியதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த சந்திப்புக்கு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதிலும், அவர் பங்கேற்க மறுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அதன்படி மகிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது செயலாளர் காமினி செனரத் ஆகியோர் இந்த கலந்துரையாடலில் இணைந்தனர்.

"என்னை சந்திக்க வேண்டும் என்று எதற்காக அழைத்தர்கள்?"

கலந்துரையாடலின் ஆரம்பத்தில் அதற்கான காரணங்களை மகிந்த ராஜபக்ஷ கேட்டார்.

"நான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதால், கடைசியாக உங்கள் ஆதரவைக் கேட்க மீண்டும் சந்திக்க வந்துள்ளேன்." – இது ரணிலின் பதில்.

இதற்கு மகிந்த ராஜபக்ஷ மிகவும் சிநேகபூர்வ புன்னகையுடன் பதிலளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

"இது எனது தனிப்பட்ட முடிவு அல்ல, கட்சி எடுத்த முடிவு. அந்த முடிவை மாற்றுவது எனக்கு கடினம்" என்றார் மகிந்த ராஜபக்ஷ.

உண்மைகளை விளக்கி ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவளிக்க முடியாத நிலை குறித்து மகிந்த ராஜபக்ஷ விளக்கிக்கூறியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இறுதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் முக்கியமான ஒரு கேள்வியைக் கேட்டதாக இந்த வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

"அப்படியானால் நீங்கள் யாரைத்தான் முன்வைக்கப் போகிறீர்கள்?" – இதுதான் ரணிலின் கேள்வி!

தம்மிக்க பெரேராவின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக மகிந்த ராஜபக்ஷ தரப்பு ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது.

"தம்மிகா பெரேராவையும் நான் அறிவேன். அவர் வருவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடைசியாக உங்களை சந்தித்து இது குறித்து மீண்டும் கலந்துரையாட வேண்டும் என்று என்னிடம் கூறினார்கள்" என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தம்முடன் இணைந்து கொண்ட பொதுஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர்கள் சார்பாக மகிந்த ராஜபக்ஷ அவர்களுடனும் ஜனாதிபதி உரையாடினார். எதிர்காலத்தில் பொதுத் தேர்தல் நடைபெற அதிக வாய்ப்புக்கள் உள்ளதால், இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவின் எதிர்காலம் குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டுள்ளது.

"என்னுடன் வந்தவர்களுக்கு என்ன நடக்கும்? தற்போது அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப் போகிறீர்களா?" என்ற கேள்வியையும் மகிந்த ராஜபக்ஷவைப் பார்த்து ரணில் கேட்டார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த, சிரித்துக்கொண்டே அதனை பின்னர்தான் பார்க்க வேண்டும் என்று பதிலளித்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனால் தற்போதைய அரசியல் நிலவரங்கள் மற்றும் மாகாணங்களில் வாக்குகள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்பது தொடர்பில் மகிந்த ராஜபக்ஷவுக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் இறுதிக்கட்ட கலந்துரையாடல் தொடர்ந்தது.

ஜாதி, மத அடிப்படையில் வாக்குப் பங்கீடு குறித்தும், பல்வேறு தொகுதிகளில் நிலவும் பிரச்சினைகள், நிலமைகள் குறித்தும் இருவரும் விவாதித்துள்ளனர். அதன்படி, இந்த விவாதம் எதிர்பார்த்த முடிவுகளை அடையவில்லை என்று இது தொடர்பான தகவல்களை வெளியிட்டுள்ள சிங்கள வார இதழ் ஒன்று தெரிவித்துள்ளது

யாழ்ப்பாண சர்வதேச
புத்தக கண்காட்சி - 2024
சர்வதேசரீதியான பங்களிப்புடன்
40 க்கும் அதிகமான
புத்தக காட்சிக்கூடங்கள்
CCIY
CHAMBER OF COMMERCE AND INDUSTRIES OF YARLPANAM
UNITY IS STRENGTH
JAFFNA INTERNATIONAL BOOK FESTIVAL
JIBF 2024
9-11 AUGUST 2024
8:00 AM – 7:00 PM
யாழ்ப்பாணக் கலாசார மத்திய நிலையம்
மேலதிக தகவல்களுக்கு
021 222 6608/9 & 070 366 3603/4
info@cciy.lk
ஊடகப் பங்காளர் – காலைக்கதிர் Kalaikkathir மாலைக்கதிர் Maalaikkathir

## கண்டுமணி மகா வித்தியாலயத்திற்கு பாண்ட் வாத்திய கருவிகள் கையளிப்பு



மட்டக்களப்பு,பட்டிருப்பு கண்டுமணி மகா வித்தியாலயத்திற்கு மாணவர்களின் நன்மை கருதி மேற்கத்திய பாண்ட வாத்தியக் கருவிகள் அன்பளிப்பு செய்யும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

பாடசாலை அதிபர் வே. யோகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பாண்ட் வாத்திய கருவிகளை கையளித்தார்.

இந்நிகழ்வில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# 16 வெளிநாட்டுப் பயணங்களை 2023 இல் மேற்கொண்ட ரணில்!

கடந்த ஆண்டு வெளிநாடுகளுக்கு வெளியுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரி 18 தடவையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 16 தடவையும் பயணம் செய்துள்ளனர்.



2023ஆம் ஆண்டுக்கான வெளியுறவுத்துறை அமைச்சின்செயற்திறன் அறிக்கையானது கடந்த வருடம் பொதுப் பணத்தை செலவழித்து வெளிநாட்டுப் பயணங்களுக்குச்சென்ற அமைச்சர்களின் விபரங்களை வெளிப்படுத்தியுள்ளது.

வெளிவிவகாரத்துறை அமைச்சர் மொகமட் அலி சப்ரி அதிக எண்ணிக்கையிலான பயணங்களை மேற்கொண்டுள்ளதாக அந்த அறிக்கை தெரிவிக்கின்றது. அவர் 2023ஆம் ஆண்டு 18 நாடுகளுக்குச் சென்றுள்ளார்.

இரண்டாவது இடத்தை ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க பெற்றுள்ளதுடன், 16 தடவைகள் 2023ஆம் ஆண்டு மாத்திரம் வெளிநாடுகளுக்கு பயணம் செய்துள்ளார். அவர் வெளிநாடுகளுக்குச்சென்ற முறை இரண்டாம் இடத்தைப் பெற்றிருந்தாலும், வெளிவிவகாரத்துறை அமைச்சரை விட, நாட்டுக்கு வெளியே பொதுப் பணத்தை செலவழித்த நாட்களின் எண்ணிக்கை அதிகம்.

மேலும், ஐக்கிய நாடுகள் சபையின் ஏற்பாட்டில் வெசாக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்வதற்காக பிரதமர் தினேஷ் குணவர்த்தன தாய்லாந்துக்கு ஒரு தடவை சென்று வந்துள்ளார்

# யாருக்கு வாக்களிப்பது என்பதை தீர்மானிக்காத வாக்காளர்கள்

## புலனாய்வுத் துறையின் ஆய்வில் தகவல்

ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு வாக்களிப்பது என்பது தொடர்பாக 40 இலட்சம் வாக்காளர்கள் இதுவரை தீர்மானிக்கவில்லை என்று அரசாங்க புலனாய்வுத் துறை நடத்திய ஆய்வில் தெரியவந்திருக்கின்றது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக அரச புலனாய்வுத்துறையினர் ஆய்வு நடத்தியுள்ளனர். இந்த ஆய்வில், 40 இலட்சத்துக்கும் அதிகமான வாக்காளர்கள் யாருக்கு வாக்களிப்பது என்பது தொடர்பாக இதுவரை தீர்மானிக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட டுள்ளது.

அரசாங்க புலனாய்வுத் றையினர் கடந்த சில நாட்களாக மிகக் கவனமாக நடத்திய ஆய்வில் இந்த உண்மைகள் வெளியாகியுள்ளன.



ஜனாதிபதியாக யாரைத் தெரிவு செய்வது என்பதை கடைசி சில வாரங்களிலேயே பெரும்பாலான வாக்காளர்கள் தர்மானிப்பார்கள் என்றும் இந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேட்பாளர்களின் பிரபல்யம், நாட்டைக் கட்டியெழுப்ப அவர்கள் வைத்திருக்கும் வேலைத்திட்டம், நாட்டின் தற்போதைய அரசியல் சூழல் போன்றவற்றை ஆய்வு செய்த பின்னரே இது தொடர்பில் அவர்கள் முடிவெடுப்பார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளையில், இவ்வருடம் மேலும் சுமார் 10 இலட்சம் இளைஞர்கள் புதிய வாக்காளர்களாக இணைந்துகொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# கிழக்கு மாகாண எறிபந்து போட்டியில் சேனைக்குடியிருப்பு கணேசா சம்பியன்



கிழக்கு மாகாண மட்ட ஏறிபந்து போட்டியில் கல் முனை கல்வி வலயத்திற்குட்பட்ட சேனைக்குடியிருப்பு கணேசா மகா வித் தியாலய 20 வயது பிரிவின் பெண்கள் அணியினர் வெற்றியீட்டி கிழக்கு மாகாண சம்பியன்களாக வெற்றி வாகை சூடி தேசிய மட்ட போட்டிக்கு தெரிவு செய்யப்பட் டுள்ளனர்.

## தேசிய மட்டத்திற்கு தெரிவு



இலங்கை பாடசாலை மெய்வல்லுனர் சங்கத்தினால் ரிட்ச்பரி நிறுவனத்தின் அனுசரணையில் நாடுபூராக நடைபெறும் 53 ஆவது (ளுசை துழாெ வுயசடியவ) சேர் ஜோன் ராபர்ட் கனிஷ்ட மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் விளையாட்டு போட்டியில், கல்முனை ஸாஹிறா தேசிய பாடசாலையைச் சேர்ந்த மாணவன் எம்.ஆர்.எம். பதாஹீ பாதிக் 14 வயதுப் பிரிவு ஆண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப்போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தையும் 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் இரண்டாம் இடத்தைப்பெற்று வெள்ளிப்பதக்கத்தையும் வென்று தேசிய மட்ட போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கிழக்குமாகாணம்மற்றும்பொலன்னறுவை மாவட்டத்தை மையமாகக் கொண்டு நடாத்தப்பட்ட ஆரம்ப சுற்றுப் போட்டிகள் மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் இடம்பெற்றன.

இச் சாதனை நிலை நாட்ட ஆலோசனைகளையும்வழிகாட்டல்களையும் வழங்கி ஊக்கப்படுத்திய கல்லூரி அதிபர் எம்.ஐ. ஜாபிர், இணைப்பாட விதான செயற்பாடுகளுக்குப்பொறுப்பான பிரதி அதிபர் ஏ.எல்.எம். தன்சீல் மற்றும் மாணவனைப் பயிற்றுவித்த உடற்கல்வி ஆசிரியர் ஏ.எம். அப்றாஜ் றிழா மற்றும் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர், இப் போட்டியில் பங்குபற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய பெற்றோர், போட்டிக்காக அழைத்துச்சென்ற பாதுகாவலர்மற்றும்போட்டிகளில்பங்கேற்று தமது உச்ச திறமைகளை வெளிக்காட்டிய மாணவனுக்கும் பாடசாலை சமூகத்தினர் பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளனர்.











## வடக்கு மாகாண அமைப்பாளராக உமா சந்திரா

ஐக்கிய மக்கள் சக்தியின் வட மாகாண பிரதான அமைப்பாளராக உமாச்சந்திரா பிரகாஷ் இன்று திங்கட்கிழமை சஜித் பிரேமதாஸ வினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதன் பிரகாரம் வட மாகாணத்துக்கான ஐக்கிய மக்கள் சக்தி கட்சிக் கட்டமைப்பு தொடர்பான பணிகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றுவதற்கான தலைமை மற்றும் பொறுப்பு உமாச்சந்திரா பிரகா/க்கு வழங்கப்பட்டுள்ளது.

## தேர்தல் சட்ட மீறல் 60 முறைப்பாடுகள்

தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் இதுவரையில் 60 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என பெப்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

அரச அதிகார துஷ்பிரயோகம் மற்றும் சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்திய குற்றச்சாட்டுகள் தொடர்பிலேயே அதிகளவான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என அதன் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

அரசியல் நோக்கங்களுக்காக சில அரச நிறுவனங்களின் சிரேஷ்ட பதவி நிலைகளில் மாற்றங்களை ஏற்படுத்தியமை, பூரணப்படுத்தப்படாத அபிவிருத்தி வேலைத்திட்டங்களை அங்குரார்ப்பணம் செய்தமை உள்ளிட்ட பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மறைத்து வைத்திருந்த யாழில் வாள்கள் மீட்பு

யாழில் குற்றச்செயல் ஒன்றை மேற்கொள்வதற்காக பற்றைக்குள் மறைத்துவைத்திருந்த 3 வாள்கள், காலணிகள், முகமூடிகள் மற்றும் மேல் அங்கிகள் என்பன இன்றையதினம் மீட்கப்பட்டுள்ளன.

ஏழாலை மேற்கு , ஏழாலை, புளியங்கிணற்றடி என்ற இடத்தில் உள்ள பற்றைக்குள் இருந்தே மேற்குறித்த பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

சுன்னாகம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இந்த மீட்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இது குறித்து மேலதிக விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.--




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.08.2024 இல் வெளியிடப்பெற்றது.